குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.182/2013

அ.சா.6

2024–ம் ஆண்டு டிசம்பர் 11–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 06–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெருமாள் | ஜாதி | |
| தந்தை பெயர் | கோவிந்தன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.49 மணி,

Accused A2/Subramani present. A1.Ramasamy died and charge abated. Advocate Mr.Siddhartha Shankar present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் பாரக்கல்லூரில் குடியிருந்து கொண்டு இருசக்கர வாகனம் மெக்கானிக் தொழில் செய்து வருகிறேன். வெங்கடேஷ் என்பவர் அவருக்கு சொந்தமான லாரியை எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோவில் அருகே வழக்கமாக நிறுத்தி வைப்பார். சுமார் 13 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு கோவில் அருகே லாரியை நிறுத்திவிட்டு வெங்கடேஷ் வீட்டிற்கு சென்று விட்டு காலை வந்து பார்த்த போது லாரி நிறுத்தியிருந்த இடத்தில் இல்லை. பின்பு போலீசார் அங்கு வந்து மாதிரி வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த 2 வது கையெழுத்து அ.சா.ஆ– 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2. இவ்வழக்கு வாதி வெங்கடேஷ் எனது ஊர்காரர் என்றால் சரி. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. அ.சா.1 பொய்யான புகாரை கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 12.53 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.